*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*
*CC.No.8/2025 – P.W. 5 (LW -7 )*

| | |
|---|---|
| *Name* | சீமான் (காவல் உதவி ஆய்வாளர்) |
| *Father/Husband's Name* | கோவிந்தசாமி |
| *Village* | சென்னை மாநகரம் கண்ணகி நகர் |
| *Taluk* | சென்னை |
| *Religion* | |
| *Age* | 59 |

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.02.2026*

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னை மாநகரம் கண்ணகி நகர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.09.2024-ம் தேதி பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்தபோது பூமிநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காவல் நிலைய குற்ற எண்.133/2024 பிரிவுகள் 296(பி), 351(3) BNS மற்றும் 25 (1)(a) Arms Act ன் கீழ் அன்றையதினமே இரவு 08.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் திருமதி சந்திரா அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் புகார்தாரரிடமிருந்து பெற்ற புகாரை அவர் தான் எழுதிக்கொண்டு வந்தார் என்றால் சரிதான். நான் அவரிடமிருந்து புகாரை பெற்றுக்கொண்டு கடை தெருவிற்கு சென்று அங்குள்ள நபர்களை விசாரித்தேன் என்றால் சரிதான். மாதிரிவரைபடத்தில் சம்பவமானது பிள்ளையார்கோவில் தெருவில் அருகிலுள்ள கடைத்தெருவில் நடந்தது என்றால் சரிதான். பொதுவாக Arms Act ன் கீழ் முதல்

தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்றால் என்ன விதமான ஆயுதங்கள் எந்த வகையில் பயன்படுத்தப்பட்டது என்பதை பொறுத்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். புகார்தாரர் சம்பவ சமயத்தில் எதிரி கையில் அருவாளை வைத்துக்கொண்டு கடைத்தெருவில் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளதால் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நான் சொல்வதுபோல் புகாரிலுள்ள சங்கதிகளை பொறுத்து Arms Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யமுடியாது என்றால் சரிதான். இந்த புகாருக்கு மிக முக்கியமான ஒரு நபர் ரமேஷ் என்ற அரசியல் பிரமுகர் என்றால் சரிதான். எதிரிக்கும் ரமேஷ் என்பவருக்கும் இடையே அரசியல் ரீதியாக பிரச்சனை இருந்து வரும் விவரம் தெரியும் என்றால் சரிதான். ரமேஷ் மற்றும் அவரது குடும்பத்திலுள்ள நபர்கள் முன்னாள் மற்றும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளார்கள் என்றால் சரிதான். ரமேஷ் என்பவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் எதிரி மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.